[வாசகனாய்_வழிப்போக்கன்](#)



சாகசங்களுக்கு பழகிய உடல் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஓய்வெடுத்துக்கொள்கிறது. சாகசங்களுக்கு பழகிவிட்ட மனம் அப்படி ஓய்வெடுத்துக்கொள்வதில்லை.

மலையாளக் கவிஞர் சச்சிதானந்தன் அவர்களின் கவிதை வரிகளை இங்கே நினைவுகூர்கிறேன்.

"நினைவில் காடுள்ள மிருகத்தை
அத்தனை எளிதாக பழக்க முடியாது".

இந்த வரிகளுக்கு மிக பொருத்தமாயிருக்கிறது கலை இலக்கிய விமர்சகர் அவர்கள் இன்று எழுதிய #மழைக்_காதல் என்கிற கவிதை. சாகசங்களுக்குப் பழகிய மனம் எப்போதும் சும்மா இருப்பதில்லை. தீராவேட்கைக்கும் இனம் புரியா வெறிக்கும் இடைப்பட்ட புள்ளியிலிருந்து அது தொடர்ந்து இயங்கிக்கொண்டேயிருக்கிறது. தோன்றினால் மட்டுமே எழுதுவேன் என்றில்லாமல் இதை எழுதவேண்டும் என்று இலக்கை தீர்மானித்து புதிய புதிய பரிசோதனை முயற்சிகளில் எழுதும் மனிதர் கவிஞர் இந்திரன் அவர்கள்.அப்படி அவர் எழுதிய இந்த கவிதை

பலருக்கு படிப்பினை. இருண்மை புலப்பட்டுவிடாமல் கற்பனையிலிருந்து அவர் எழுதியிருக்கும் இந்த கவிதை அசாத்தியமானது.
ஏதோவொன்றின் மீதுள்ள மனிதனின் தீராக் காதல் தான் தாஜ்மஹால்களை பாபிலோன் திராட்சைத் தோட்டங்களை உருவாக்கச் சொல்கிறது.
அப்படி இங்கே கவிஞர் தன் காதலி இதழ் சுழிக்கையில் சிதறும் திராட்சைகளை சேகரிக்கிறார். இத்தனை வயதை கடந்தபோதிலும். நான் முன்பே சொல்லிவிட்டேன் வயதுக்கும் சாகசங்களுக்கும் சம்பந்தமில்லையென்று.
யுகங்களை கணங்களாய்
கணங்களை யுகங்களாய் மாற்றும் சூட்சமம் காதலிடம் மட்டுமே இருக்கிறது.அந்த சூட்சமத்தில் சிக்கிய கவிஞர் இவ்வரிகளை எழுதுகிறார்.
"காருக்கு வெளியில் துளித்துளியாய் வலுக்க தொடங்கும் மழை பல நூற்றாண்டுகளுக்குத் தொடர்ந்து பெய்கிறது " என்று.
எளிதில் கிரகித்துக்கொள்ளக்கூடிய ஆனால் ஆழம் பொதிந்த படிமங்கள் கவிதையின் ஒவ்வொரு பத்தியிலும் உறுத்தலின்றி விளையாடுகின்றன.
"வார்த்தைகளின் மெலிதான கோடுகளில்
சிறிது சிறிதாய்ப் புலப்பட த்தொடங்குகிறது
உனக்குள் புரளும்
கண்ணாடியில் காற்றூதி செய்த உலகம்" என்று மொழியை சூழல விடுகிறார்.
கண்ணாடி அணிந்த காதலிகளைக் காதலித்திருக்கிறார்கள் அவர்களுக்குக் கவிதை கூட எழுதியிருப்பார்கள் ஆனால் காதலியை கண்ணாடியோடு எத்தனை பேர் கவிதையில் எழுதியிருப்பார்கள் என்று தெரியவில்லை.
ஏனெனில் கண்ணாடியணிதல் என்பது ஊனம் என்ற எண்ணம் மக்கள் மனதில் புரையோடிப்போயிருக்கிறது.அதைத் தகர்க்கும் விதமாக இந்தக் கவிதையில் கவிஞர் தனது காதலியை கண்ணாடியோடு நமக்கு அறிமுகப்படுத்துகிறார் இல்லை இல்லை அழகுபடுத்துகிறார், கௌரவப்படுத்துகிறார்.
"அச்சேறி உறைந்து போன
எனது வார்த்தைகளை

கண்ணாடி அணிந்து நீ படிக்கையில்
அகழ்வாராய்ச்சியில் கிடைத்த
குறியீடுகளை
நீ தூரிகைகளால் சுத்தம் செய்கிறாய்" என தனது எழுத்துகள்
பிறவிப்பயன் அடைவதை அழகான வரிகளில் சொல்லி
கண்ணாடியணிந்த அழகான காதலியை கௌரவமாய்
அறிமுகப்படுத்துகிறார்.
ஒரு நவீன கவிதைக்குள் தொல்காப்பியரையும் அவரின்
இலக்கணப்படி பெய்யும் பரிசுத்தமான மழையையும் அதுவும்
கவிதை தீட்டும் மழையை நமக்குக் காட்டுகிறார்.
மழை எல்லோருக்கும் பொது தான் ஆனால் அது எல்லோருக்கும்
கவிதையாவது இல்லை அல்லவா.
சமயங்களில் தேவன் கூட உறங்கிவிடுவதுண்டு, ஆனால் சாத்தான்
உறங்காமல் கையில் ஆப்பிளுடன்
சுற்றியலைந்துகொண்டேயிருக்கிறான்.. இன்று இந்திரன் அவர்கள்
சாத்தானை வழிமறித்து அந்த ஆப்பிளை மிரட்டிப் பறித்து வழிப்பறி
செய்துள்ளார்.
அந்த துணிச்சல் தமிழ் பரப்பில் ஒரு சிலருக்கு மட்டுமே இருக்கிறது
அதில் முதன்மையானவர் கவிஞர் இந்திரன் அவர்கள்.
#இதோ_அந்த_முழு_கவிதை
#மழைக்_காதல்
மழையில் நனைந்து முன்னேறும் காருக்கு உள்ளே
நீயும் நானும் .
உதடுகளைச் சுழித்து நீ பேசுகையில்
நான் திராட்சைகளைச் சேகரிக்கிறேன்.
காருக்கு வெளியே
துளித் துளியாக வலுக்கத் தொடங்கும் மழை
பல நூற்றாண்டுகளுக்குத் தொடர்ந்து பெய்கிறது.
வார்த்தைகளின் மெலிதான கோடுகளில்
சிறிது சிறிதாய்ப் புலப்படத் தொடங்குகிறது
உனக்குள் புரளும்
கண்ணாடியில் காற்றூதிச் செய்த உலகம்.
காரின் பக்கத்துக் கண்ணாடியில்
கசப்பும் புளிப்புமான அனுபவங்களின்
பிம்பம் தட்டுப்படுவதை

நட்சத்திரங்கள் பார்த்து எனக்குச் சொல்கின்றன.
அச்சேறி உறைந்து போன எனது வார்த்தைகளை
கண்ணாடி அணிந்து நீ படிக்கையில்
அகழ்வாராய்ச்சியில் கிடைத்த குறியீடுகளை
நீ தூரிகையால் சுத்தம் செய்யத் தொடங்கி விடுகிறாய் .
வாசித்துக் கொண்டே
உள்ளங்கையால் வாய் பொத்தி உதிர்க்கும்
உன் சிரிப்பு மத்தாப்புக்களால்
காகித விளக்குகளின் திரி கொளுத்தி
வானம் முழுவதையும் அலங்கரித்து விடுகிறாய்.
ஈர இருளின் உடை அணியத் தொடங்கும் மாலை
இப்போது திருவிழாவுக்குத் தயாராகி விடுகிறது.
ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுதலின்
தறி மெல்ல அசையத் தொடங்குகிறது.
காருக்கு வெளியே
தொல்காப்பியர் காலத்து இலக்கணப்படி
கவிதை தீட்டுகிறது மழை.
#இந்திரன்
#கலை_இலக்கிய_விமர்சகர்